# இலக்கியமாக்கப்படாத இஸ்லாமிய வாழ்வுலகம்

**முனைவர் மௌ. அஸ்தா அலி**
உதவி பேராசிரியர், தமிழ்த்துறை
ஆச்சாரியா கலை அறிவியல் கல்லூரி
புதுச்சேரி

ஒரு நூற்றாண்டு காலத்திற்கு மேலாக தமிழில் எழுதப்பட்டு வந்துள்ள இஸ்லாமியப் புனைகதைகள் பெரும்பாலும் மதக்கோட்பாடுகளைப் பிரச்சாரம் செய்கின்ற பிரச்சாரக் கருவியாக இருந்தனவே தவிர இலக்கிய ஆக்கத்திற்கானவையாக அமையவில்லை. தமிழில் இஸ்லாமியப் புனைகதைகள் என்றால் சம்பிரதாயத்துக்கு உரியதாகக் கருதப்பட்டு வந்துள்ள நிலையை மாற்றி, முதன்முதலில் இந்தப் பிடியைத் தளர்த்தியவராகத் தோப்பில் முஹம்மது மீரான் அறியப்படுகிறார். மீரானுக்குப் பிறகு உருவான வெற்றிடத்தை நிரப்பியவர்களாக மீரான் மைதீன், சல்மா, முஜிபுர் ரஹ்மான், அஷியா, கீரனூர் ஜாகிர்ராஜா ஆகியோர் விளங்குகின்றனர். இவர்கள் இஸ்லாமியப் புனைகதை மரபைப் புதிய வீச்சோடு எதிர்கொண்டார்கள். இந்தப் பின்னணியில் படைப்புலகில் நுழைந்த கீரனூர் ஜாகிர்ராஜா இஸ்லாமியச் சமூகத்தில் தொட முடியாத பகுதிகளை எழுதிவிட முடியும் என்னும் நம்பிக்கையோடு மீன்காரத் தெரு, கருத்த லெப்பை, துருக்கித் தொப்பி, வடக்கேமுறி அலிமா, மீன்குகைவாசிகள், குட்டிச்சுவர் கலைஞன் ஆகிய ஆறு நாவல்களைக் குறுகிய காலகட்டத்தில் படைப்பாக்கம் செய்துள்ளார்.

கீரனூர் ஜாகிர்ராஜாவின் முதல் நாவலான 'மீன்காரத் தெரு' இஸ்லாமியர்களில் ஒடுக்கப்பட்டவர்களின் வாழ்நிலையைக் களமாகக்கொண்டுள்ளது. தமிழ் இஸ்லாமிய சமூகம் என்னும் ஒற்றைச் சொல்லாடலைக் கலைத்து, அதற்குள் இயங்கும் இராவுத்தர், லெப்பை, மீங்காரர் என்னும் பல்வேறு மேல் கீழ் அம்சங்களை ஜாகிர்ராஜா இந்நாவலில் பதிவு செய்துள்ளார். மைய அரசியல் மையப்பட்ட இஸ்லாமிய மனோபாவத்திற்கு மாற்றாக வாழ்கின்ற விளிம்புநிலையினரின் வாழ்க்கை பன்முகத் தன்மையுடையதாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. பொருளியல் ஏற்றத்தாழ்வு காரணமாக, வசதி படைத்த இஸ்லாமியாகளால் பாலியல் வன்முறை உட்படப் பல்வேறு ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாகும் அடித்தட்டு இஸ்லாமியர்களின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் இந்நாவல் தமிழுக்கு அறிமுகமாகாத பல புதிய அடையாளங்களோடு புனைவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

## விளிம்பு நிலை மக்களும் கீரனூர் ஜாகிர்ராஜாவின் அடையாளமும்

சமூகத்தில் ஓரந்தள்ளப்பட்ட அடித்தள மக்களின் வேதனைகளை, வலிகளை வெளிக் கொணர்வதாக விளிம்புநிலை ஆய்வுகள் அமைகின்றன. ஐரோப்பாவில் வாழ்ந்த வங்காளத்தைச் சார்ந்த 'ரணஜித் குகா' தலைமையிலான குழுவினரால் அறிமுகம் செய்யப்பட்ட இவ்வாய்வு முறை அம்பேத்கர் நூற்றாண்டு விழா நிகழ்ந்த 1990-களுக்குப் பிறகு தமிழகத்தில் சிறப்பான இடம் பிடித்தது. பாலியலில், தேசியத்தில், பொருளாதாரத்தில் தாழ்ந்த நிலைக்குத் தள்ளப்பட்ட மக்களைக் குறித்த கல்வியியலைத் தான் விளிம்புநிலை

ஆய்வு என்கிறோம். தமிழ் இலக்கியப் பரப்பில் தலித்துகள், பெண்கள், அரவாணிகள், பரத்தையர்கள், கூலிகள் முதலிய விளிம்புநிலை மக்கள் தங்கள் வாழ்க்கைப் பாடுகளை மொழிப்படுத்த முன்வந்துள்ளனர். தமிழ்ச் சமூகத்தில் பல இருண்ட பகுதிகள் இன்றைக்கு இலக்கிய அழகியலாகத் தங்களை வெளிப்படுத்திக் கொள்கின்றன. இந்தச் சூழலில் இஸ்லாமிய அடையாளப் பகிர்வு சமீபகாலமாகப் புத்துணர்ச்சி பெற்று வருகிறது. இஸ்லாமிய சமூகத்தில் வாழும் பெரும்பான்மையினர் விளிம்புநிலை என்னும் அடையாளத்துடனேயே வாழ்வை நகர்த்துகின்றனர்.

உலக அளவில் மூடுண்ட சமூகம் எனவும் தீவிரவாதிகள் சமூகம் எனவும் முத்திரை குத்தப்பட்ட இஸ்லாமிய சமுதாயம் இன்றைய சமூக அமைப்பில் எதிர்கொள்ளும் சிக்கல்கள் ஏராளம். அவற்றில் அதிகமானவை அபத்தமானவை. அரசாங்கத்தின் அடக்குமுறையைக் கணக்கில் எடுத்துக்கொண்டால் இந்தியாவிலுள்ள பிற பிரிவினரைவிட இஸ்லாமியர்களே அதிக அளவில் இலக்காகப்படுகின்றனர். பொய் வழக்குகளைப் போட்டுச் சிறைச்சாலைகளில் அடைக்கப்படும் இஸ்லாமியர்கள் பெரும்பாலும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களே ஆவார். இஸ்லாமியர்களின் அரசியல் இயக்கச் செயல்பாடும் திருப்திகரமானதாக இல்லை. தன் சமூகப் பிரச்சினைகளைப் பாராளுமன்றத்திலோ, சட்டமன்றத்திலோ பிரதிநிதித்துவப்படுத்த சிறுபான்மை உறுப்பினர்களைக்கொண்ட இஸ்லாமியர்களால் இயலாத சூழ்நிலையே தொடர்கிறது. இஸ்லாமிய சமுதாய மக்களில் நான்கு சதவீதம் மட்டுமே மதரசா பள்ளி செல்கின்றனர். அந்த நான்கு சதவீதத்திலும்கூட சிலர் பொருளாதார நிர்பந்தங்களினாலும், வசதி வாய்ப்புகள் இல்லாமையாலும் வேறு பள்ளிக்குச் செல்ல விருப்பம் இருந்தும் அவ்வாறு செல்ல முடியாதவர்களாக உள்ளனர்.

2006-இல் வெளியான நீதிபதி இராஜேந்திர சச்சார் தலைமையிலான சச்சார் கமிட்டி அறிக்கையில் சச்சார் குறிப்பிடும் கருத்து அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது. இந்தியாவில் 100-க்கு 70 சதவிகித இஸ்லாமியர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளனர். வேறு எந்தச் சமூகத்திலும் இல்லாத அளவு இஸ்லாமியர்களில் பெரும்பான்மையினர் விளிம்புநிலை மக்களாக, அன்றாடங்காய்ச்சிகளாக வாழ்ந்து உழல்கின்றனர் என்று ஆதாரபூர்வமாகக் கூறுகின்றார்.

கீரனூர் ஜாகிர்ராஜாவின் எழுத்துலகப் பிரவேசமும் விளிம்புநிலை மக்களின் பாதிப்பால் உண்டானவை. இதை அவரே குறிப்பிடுகிறார்- ‘‘நவீன இஸ்லாமிய எழுத்து முன்னோடிகளில் பலரும் திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்தவர்களாயிருந்தனர். எனவே அவர்களுடைய எழுத்துக்களில் அந்தப் பகுதி வாழ்க்கை மட்டுமே பதிவாக வாய்ப்பிருக்கிறது. என் மண்ணின் இஸ்லாமிய வாழ்வுக்கும் அவற்றுக்கும் நிறைய வேறுபாடுகள் இருந்தன. மொழி வழக்கு, வாழ்வியல், சம்பிரதாயங்கள், தொழில், உணவுப் பழக்கங்கள் யாவும் மாறுபட்டிருந்தன. நெல்லையில் இருந்தோ, குமரியில் இருந்தோ ஒரு இஸ்லாமியன் காணும் கனவுக்கும், கொங்குப் பகுதியாம் பழநி கீரனூரில் இருந்து கொண்டு நான் வாழ்க்கையைத் திட்டமிடுவதற்கும் இடைவெளி நிறைய இருந்தன. குறிப்பாக தஞ்சை, இராமநாதபுரம், நெல்லை, குமரி மாவட்ட முஸ்லிம்களின் பொதுக் கனவாகிப் போயிருந்த வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் குறித்து என் மண்ணின் மக்களில் பெரும்பாலானோர் சிந்தித்ததே இல்லை. தொலைவோ, அருகாமையோ, அவர்கள் தாய் நாட்டில் இருந்து கொண்டு உழைத்து வாழ்வதில் பெருமை கொண்டுள்ளனர். விவசாயம், வணிகம் என்று ஒரு மேல்தட்டுப் பிரிவும், கடைநிலைப் பணியாற்றும் விளிம்புநிலை மக்கள் ஒரு பகுதியினராகவும்

இருந்தனா். இந்தப் பின்னணியிலிருந்து நான் எழுத வந்தேன்" (ஹெச்.ஜி.ரசூல், கெண்டைமீன் குஞ்சும் குர்ஆன் தேவதையும், பக்3-4)

**இஸ்லாமும் வர்க்கமும்**

இஸ்லாமிய அடையாளத்திற்குள் தமிழ் இஸ்லாம், உருது இஸ்லாம், மலையாள இஸ்லாம் என்று மொழி அடிப்படையில் பிரிக்கப்பட்டு பன்னூறு கதை சொல்லாக்கங்கள் உருவாக்கம்பெற்று வருகின்றன. தமிழகத்தின் வரையறை எல்லைக்குள் தமிழ் இஸ்லாமியா்கள் மைய நீரோட்டத்தில இராவுத்தா்கள், மரைக்காயா்கள், லெப்பைகள் எனப் பன்மை அடையாளங்களைக் கொண்டிருப்பினும் இத்தகைய மைய நீரோட்டத்தில் இணைய முடியாத விளிம்புநிலை இஸ்லாமியா்களும் உள்ளனா். ஒசாக்கள் என்னும் நாவிதா், வண்ணாா், குளம் குட்டைகளில் மீன் பிடிப்போா், பீடி சுற்றுபவா்கள், தோல் தொழில், நெசவு, பாய் முடைதல், கபுறுகுழி தோண்டுதல், கசாப்புக் கடை வியாபாரம், இரும்புப் பட்டறை தொழிலாளா், நிரந்தர குடியிருப்பின்றி அலைந்து திரியும் பக்கீா்கள், தா்கா முற்றங்களில் வாழும் முஸாபாக்கள் எனப் பல வகையான அடையாளங்களோடு விளிம்புநிலையில் வாழ்பவா்களாக உள்ளனா். இத்தகையதான மக்கள் சாா்ந்து ஒருவகை பிரதிநிதித்துவப்படுத்துதல் வாழ்வைக் கதைப் பிரதிக்குள் கொண்டு வந்த முறையில் ஜாகிா்ராஜாவின் மீன்காரத் தெரு நாவல் முக்கியத்துவம் பெறுகிறது.

“இறுக்கமான படிநிலை அமைப்பும், சாதி அடிப்படையிலான தொழிலை மாற்றிக் கொள்ள முடியாத அகக்கட்டுமானமும் உள்ள சாதிப் பிரிவினைகளின் அடிப்படையிலான சமூக உறவுகள் நிலவுகிற இந்தியச் சூழலானது ஆக்கப்பூா்வமான மனித ஆற்றல் வெளிப்பாட்டை அனுமதிப்பதில்லை. இந்தத் தளைகள் உழைக்கும் வா்க்கத்தின் ஒட்டுமொத்த ஆற்றலைக் குலைக்கின்றன. உற்பத்திச் சக்திகளின் குறை வளா்ச்சிக்குக் காரணமாகின்றன” என்னும் கூற்று இங்கு எண்ணத்தக்கது. (சாதியும் வா்க்கமும், ப.38)

கடல் தொழில் செய்யாத மீனவ இஸ்லாமியா்களை மீன்காரத் தெரு வெளிக் கொணா்கிறது. ஆறு, குளம், குட்டைகளில் மீன் பிடித்து வாழும் தலித் இஸ்லாமியா்கள் என்னும் அடையாளம் புதிய பதிவுகளுடன் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. தொழில் அடிப்படையில் இழிவானவா்களாகக் கருதப்படும் மீன்கார இஸ்லாமிய சமூகங்களின் வாழ்வினைக் கலாச்சாரரீதியாக ஒடுக்குமுறை செய்யும் ஆதிக்க மனோபாவம் கொண்ட இஸ்லாமியா்களைத் தோலுரித்துக் காட்டுகிறது. இஸ்லாமியா்கள் வாழுமிடம் தெருக்கள் சாா்ந்த இருவேறுபட்ட குடியிருப்புகளாக இந்த நாவலில் உருவம் பெறுகின்றது. பங்களாத் தெரு, மீன்காரத் தெரு எனப் பிரிந்து கிடக்கும் வாழ்வுலகம் ஒன்றை மற்றொன்று விலக்கிவைப்பதாகவும், உயா்வு தாழ்வு மனோபாவங்களாகவும் மையங்கள் ஒடுக்குமுறை செய்யும் விளிம்புகளாகவும் காட்சி தருகின்றன.

“கலிமா சொல்லி குரான் வழி நடக்குற எல்லாமே முஸல்மானுங்கதே. அவுங்களுக்குள்ள ஜாதியோ பிரிவோ கெடையாதுன்டு சொல்லியிருந்தாலும் ஏதோ ரூபத்துல நமக்குள்ளயும் ஜாதி இருக்கத்தேஞ் செய்யுது. குரான் ஓதிக் குடுக்கற லெப்பைங்க அதுல கெடைக்கிறத வச்சுத்தேம் பொழப்பு நடத்திக்கறாங்க. அதுனால் அவுங்க மட்டம். ராவுத்தருங்க சொந்தமா தொழில் செய்யுறாங்க, வசதியா வாழுறாங்க. அதுனால அவங்க ஒசத்தி. நாம மீன் பிடிச்சு வித்து பொழைக்கிறம். அதுனால இன்னம் கீழ, மட்டத்துலயும் மட்டம். நம்ம மீங்காரன் தான கபுறு குழி வெட்டுறான், மய்யித்த குளிப்பாட்டுறான், மவுத்து சேதிய வீடு வீடா தட்டிச்

சொல்றான், பள்ளிவாசலக் கூட்டறான், தொடைக்கிறான். இந்த ஊரு ராவுத்தர்லயோ லெபைலயோ எவனும் வந்து செய்யிறானா செய்ய மாட்டான். ஆனா ஒண்ணு நீ காசு சேத்திட்டன்னா ஒன்னை கூட்டாளியாக்கிக்குவாங்க. ஒன்னெ மருமகளா அவங்க வீட்டுக்கு கட்டிக்க மட்டும் மாட்டாங்க. ஏன்னா நீ பொறப்பால மீங்காரி, அவுங்க பங்களாத் தெரு ராவுத்தர்” (மீன்காரத் தெரு, பக.49-50)

சாதியப் படிநிலைகளை வன்மையாகச் சாடும் இஸ்லாமியச் சமயத்தில் தொழில் அடிப்படையிலான வர்க்க முரண்பாடுகள் பெரிய அளவில் இறுக்கம் கொண்டுள்ளன. முதலாளிx தொழிலாளி, அரசு அதிகார எந்திரம்x அரசுப் பணியாளன்x என்னும் பொருளியல் சார்ந்த வர்க்க யதார்த்தத்தோடு இராவுத்தர்x லெப்பைx மீங்காரர் என உருவாகியுள்ள படிநிலைகள் சமுதாய இறுக்கத்தைப் பரிந்துரை செய்பவைகளாக உள்ளன. இந்த முரண்பாடுகளின் எதிர்நீச்சல்தான் ஜாகிர்ராஜாவின் நாவலுக்கு உந்துசக்தியாக அமைந்திருக்கிறது.

‘மீங்காரன்’ என்னும் சொல்லுக்குள் உறைந்திருக்கும் வன்முறை, பயங்கரங்களின் மௌனமாகக் கட்டியமைக்கப்பட்டுள்ளது. மேல் சாதியினரின் ஆதிக்க அரசியலால் மீன்காரர்களுக்குப் பொது இடங்களில் சம உரிமை மறுக்கப்படுவதும், தீண்டாமை என்னும் கொடூரத்தால் ஊரைவிட்டு விலக்கி வைக்கப்படும் கொடூரமும், நாள்தோறும் இவர்கள் எதிர்கொள்ளும் இன்னல்களின் அடிச்சுவடுகளாகும்.

“நல்ல தண்ணிக்கு கொளத்துப் பள்ளிக்கூடந்தான்ல போகணும். இங்கிட்டு பூசணிக்கா வெல கெணத்துலயோ தொண்டுவா கெணத்துலயோ நம்பள தண்ணி எடுக்க விட மாட்டீங்கறாளுங்க. ஏல.. நம்ம தொட்டா தீட்டாயிரும்மா” (மீன்காரத் தெரு, ப.102)

சாதியம் எல்லோரிடமும் ஏற்புப் பெற்ற படிநிலை அமைப்பை அடிப்படையாகக் கொண்டது. எனவே ஒரே தகுதியைக் கொண்ட சாதிப் பிரிவினருக்குள்ளும் மற்றொரு சாதியினரை அடக்கவும், அதிகாரம் செய்யவுமான மனநிலைகள் தொடர்கின்றன. பங்களாத் தெரு பூசணிக்கா லெவ்வ கெணத்துல மீன்காரத் தெருக்காரர்கள் தண்ணி எடுக்க முடியாது. தீட்டு பட்டு விடுமென்ற உயா;சாதி மனோபாவமே இதற்குக் காரணம். தண்ணீர் எடுக்கவிடாத அசன் ராவுத்தர் கெணத்தில நாயை அடிச்சுக் கொன்று தூக்கிப் போடும் மீன்காரத் தெரு நைனாவின் செய்கை, கலகச் செயலாகவே அமைகிறது. கிணற்றின் புனிதங்கள் இங்கே உடைபடத் துவங்குகின்றன.

மீன்காரச் சமூகத்தில் மேலெழும்பி வாழும் நைனாவை விளிம்புநிலை வாழ்வின் அடையாளமாகக் கருதலாம். இராவுத்தர், லெப்பை இஸ்லாமியர்களால் சமூகரீதியாக ஒடுக்கப்பட்ட மீன்காரத் தெருவின் முக்கிய குறியீடான நைனா, தான் சாராத பிற ஒடுக்கப்பட்ட நாசுவர், பறையர், சக்கிலியர், குறவர் சமுதாயங்களை இழிவாகப் பார்க்கும் அணுகுமுறையும், பாலியல் அதிகாரச் செயல்பாட்டிற்கு இப்பெண்களைப் பயன்படுத்தும் முறையும் இந்நாவலின் இரண்டாம் நிலை உருவாக்கத்தில் சிக்கல் நிறைந்ததாக அமைந்துள்ளன.

## ஆண்மைய அதிகாரச் செயல்பாடு

“ஆணாதிக்கம் நிறைந்த உலகில் தந்தை ஆதிக்கத்தால் உருவாக்கப்பட்ட சமுதாயத்தில் பெண்களின் வாழ்க்கை முறையானது சிதறடிக்கப்பட்டு விடுகிறது. பெண்ணின் வாழ்க்கையானது அவளது உள்நிலையில் தங்கியிராது புறநிலைகளின் மேல்

தங்கிவிடுகிறது. இதனால் அவள் ஆளுமையும் மனநிலையும் உடைக்கப்பட்டு அவள் உலகை வேறு ஒருவரின் கண்களின் மூலமே பார்க்கத் தலைப்படுகிறாள்” என்று குறிப்பிடும் சிமோன்.தி.பவரின் கருத்து சமுதாயத்தில் பெண்ணிற்கான வாழ்நிலையை ஆண்மைய அதிகாரச் செயல்பாடே நிர்ணயம் செய்கின்றது என்பதைத் தெளிவுப்படுத்துகின்றது.

கீரனூர் ஜாகிர்ராஜா எடுத்துரைக்கும் இஸ்லாமியப் பெண்களின் உலகம் அதிர்ச்சிகரமாக விரிந்து கிடக்கிறது. பங்களாத் தெரு முதலாளிகளின் வீடுகளில் பணி செய்யும் மீன்காரத் தெரு பெண்கள் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்படுவதுடன், அவர்களுக்குக் கருகமணியுடன் நகை பணம் கொடுத்து இலவசத் திருமணங்கள் நடத்தப்படுகிற பயங்கரங்கள் இந்நாவல் வழி அம்பலப்படுத்தப்படுகின்றன.

“தெருப்பெண்கள் எத்தனையோ பேரை வேலைக்கு என்று அழைத்துப் போவாள். பிறகு இரண்டொரு மாதங்களில் ஏதேனுமொரு காரணம் சொல்லி அவர்களை மீண்டும் தெருவுக்கே அனுப்பி விடுவாள். அழைத்துச் செல்ல காரணமில்லாதது போலவே அவள் திருப்பி அனுப்புவதற்கும் காரணம் சொன்னதில்லை. யாரும் எதுவும் கேட்டுக் கொண்டதில்லை. மீறிக் கேட்டால் வசை விழும். அடுத்த முறை பங்களாத் தெருவக்கு குண்டான் எடுத்துக் கொண்டு போனால் காரியம் நடக்காது. வறுமை அவர்களை கேள்வி கேட்டுவிடாமல் தடுத்தது. பெரிய முதலாளி வீட்டுக்கு மட்டுமல்ல பங்களாத் தெரு முதலாளிமார் வீடுகள் அனைத்துக்கும் வேலைக்குத் தேவைப்படும் ஆட்களை தெருவிலிருந்து சப்ளை செய்யும் தரகர் “ரமீஜாதான். அவள் வேலைக்குச் சேர்த்துவிட்ட பல வயசுப் பெண்களுக்கு முதலாளிமார்களே நகை பணம் தந்து கல்யாண காரியமும் செய்து வைத்ததுண்டு. முதலாளிமார்களின் வீடுகளில் அந்தப் பெண்களை எப்படிப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதில்தான் பலவிதமான ஹேஷ்யங்கள் உலவின ஊர் மக்களிடம்” என்று குறிப்பிடும் ஜாகிர்ராஜா நாடெங்கும் நடைபெறும் இலவசத் திருமணங்களின் மௌனத்தைக் கலைத்துள்ளார். (மீன்காரத் தெரு, பக் 52-53)

பங்களாத் தெரு முதலாளிகளுக்குப் பெண்களைச் சேர்த்துக் கொடுக்கும் ரமீஜா மீன்காரத் தெருவின் ஒரு விதிவிலக்கு. பெரியவரின் வீட்டு வேலைக்காரியாகத் தொடங்கி அவரின் அந்தரங்கத்திற்குள் நுழைந்த ரமீஜாவுக்கு பெரியவர் நிக்காஹ் நடத்திக் கொடுக்கிறார். இரண்டே வருடத்தில் புருஷன் இவளைவிட்டு ஓடிப்போகத் திரும்பவும் பங்களாத் தெருவின் விசுவாசியாகத் தன்னை மாற்றிக்கொண்ட துயரக்கதை ரமீஜாவிற்குச் சொந்தமானது.

“நா வந்தப் பெறகு மீங்காரக் குட்டிங்க யாரும் பள்ளிக்கூடம் போன மாதிரி தெரியில. பசங்க ரெண்டு மூணு பேரு போயிட்டு இருந்தாங்க” (மீன்காரத் தெரு, ப.46)

கல்வியைப் பொறுத்தவரையில் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் கல்வியில் முன்னேற்றம் பெற வேண்டியுள்ளது. கடந்த சில ஆண்டுகளில் இஸ்லாமிய மக்களின் கல்வி நிலை எதிர்பார்த்ததைவிட சற்று முன்னேற்றமடைந்துள்ளது. ஆனால் விளிம்புநிலைப் பெண்களுக்குக் கல்வி இன்னும் எட்டாக்கனியாகவே உள்ளது. வறுமையும் அதிகாரமும் சேர்ந்து மையம் கொள்கின்ற இவர்களின் வாழ்விற்கு இஸ்லாமியப் பிரதிநிதிகளும், ஜமாஅத் தலைவர்களும் மிகப்பெரிய அளவில் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

மத்திய அரசாங்கத்தின் அகில இந்திய அளவிலான புள்ளிவிவரம் இஸ்லாமியர்களின் வேலைவாய்ப்பு இன்றைய சமூக அமைப்பில் எத்தகைய பின்னடைவைக் கொண்டுள்ளது

என்பதைப் புலப்படுத்துகிறது. மக்கள் தொகையில் 13.4 சதவீதம் உள்ள இஸ்லாமியர்களில் 4.9 சதவீதம் பேர் மட்டுமே வேலைவாய்ப்பினைப் பெற்றுள்ளனர். அவர்களில் பெரும்பான்மையினர் மிகவும் தாழ்ந்த நிலையிலேயே உள்ளனர். 98.7 சதவீத வேலைகள் மிகவும் கீழ்மட்டத்தில் உள்ள வேலைகளே. உயர்மட்ட வேலைகளில் வெறும் 3.2 சதவீதம் மட்டுமே இஸ்லாமிய மக்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. கல்வியைப் பொறுத்தவரையில் வெறும் 3.4 சதவீதம் மட்டுமே பட்டம் பெற்றவர்கள். எழுத்தறிவு வெறும் 59.1 சதவீதம் மட்டுமே. வறுமையை எடுத்துக்கொண்டால் 31 சதவீதம் பேர் ஏழ்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த இஸ்லாமிய மக்களில் அடித்தட்டுப் பகுதி இஸ்லாமியர்களில் 10 சதவீத மக்கள் வறுமையின் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர்.

ஜாகிர்ராஜாவின் நாவலில் உலவுகிற பெண்கள் வறுமையிலும், கல்வி கற்க முடியாத பொருளாதார நெருக்கடிக்குள்ளானவர்களாகவும் உள்ளனர். விளிம்புநிலைப் பெண்கள் ஒரு சிலர் கல்விக் கற்று சிறப்படைந்தாலும் தங்கள் குலத்தொழிலைச் செய்கின்றவர்களாக மேட்டிமைச் சமூகத்தால் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். ஒடுக்கப்பட்ட பெண்களின் ஏழ்மை, பாதுகாப்பற்ற நிலை, சாதிய இழிவு போன்றவற்றை சாதகமாகக் கொண்டுப் பெண்களை வன்புணர்ச்சிக்குக் கட்டாயப்படுத்துகின்ற போக்குகள் ஆணாதிக்கச் சமூகத்தால் உண்டாக்கப்படும் சமூக அவலம் என்பதைக் கீரனூர் ஜாகிர்ராஜா பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

“இரண்டு வருஷத்தில் அவளைப் படாதபாடு படுத்தியிருக்கிறான். எத்தனை தீக்காயங்கள், எத்தனை மிதி, எத்தனை அடி எல்லாம் வாங்கிக்கொண்டு அவனிடம் அன்பாகவே இருந்திருக்கிறாள். அத்தனை பொறுமைசாலி” (மீன்காரத் தெரு, ப.78)

நைனா மனைவி மும்தாஜீன் பாலியல் தேவைகளைப் புரிந்துகொள்ள முடியாதவனாக, அசுரப்போதையில் பாலியல் உறவு மேற்கொள்பவனாக மட்டுமே காட்சியளிக்கிறான். நைனாவின் வரம்புமுறை மீறிய பாலியல் உறவு தோப்பில் வசிக்கும் வள்ளியுடன் நிகழ்கிறது. நைனா மூலம் வள்ளி சுமந்த கருவை ஏற்றுக்கொள்ள முன்வந்த மும்தாஜ் அடிதடிகளோடு வாழ்ந்த தனது இரண்டு வருட வாழ்க்கையை வெகு சீக்கிரத்திலேயே முடிவுக்குக்கொண்டு வருகிறாள். நைனாவின் பிடியிலிருந்து விடுபட்டு மீசை முளைக்காத இளைஞன் ஒருவனுக்கு மனைவியாகச் சென்றுவிடும் மும்தாஜின் தாம்பத்ய விடுதலை, கணவனின் ஒடுக்குமுறைக்கு எதிரான ஒரு கலாச்சார நடவடிக்கையே ஆகும்.

வர்க்க யதார்த்தம், கலாச்சார யதார்த்தம், விளிம்புநிலை யதார்த்தம் என்னும் பன்மை அடையாளங்களை ஓர் அடுக்கில் கொண்டு வரும் கீரனூர் ஜாகிர்ராஜா, விளிம்புநிலைப் பெண்களின் அன்றாட வாழ்வில் ஆண் செலுத்தும் ஆதிக்கம், குடும்ப வன்முறை, பாலியல் வன்முறை, மரபைப் பேணுவதற்குப் பெண் மீது திணிக்கப்படும் அடக்குமுறை போன்ற பிரச்சினைகளை மையமிட்டே வாழ்வை நகர்த்துகின்றனர் என்பதைத் தன் நாவலின் குறியீடாக முன்வைக்கிறார்.

**முடிவுரை**

இஸ்லாமிய நாவல் இலக்கிய வளர்ச்சியில் புதிய பரிணாமத்தை உண்டாக்கிய படைப்பாளரான கீரனூர் ஜாகிர்ராஜா இதுவரை கவனத்துக்குக் கொண்டுவரப்படாத மறைக்கப்பட்ட இஸ்லாமிய வாழ்வியலை மொழிப்படுத்தியுள்ளார். இஸ்லாமிய சமயத்தில் புனிதம் எனக் கொண்டாடப்பட்ட சமய நெறிகளும், சிந்தனைகளும் உடைபட்டு

விளிம்புநிலை மக்கள் சார்ந்த பதிவு புதிய எழுச்சியையும், இஸ்லாமிய நாவல் இலக்கியத்தின் போக்கையும் வேறொரு தளத்திற்கு இட்டுச் சென்றது. சாதியப் படிநிலைகளை வன்மையாகச் சாடும் இஸ்லாமிய சமூகத்தில் மீன்காரத் தெரு மக்களின் இறுக்கமான வாழ்வும், பாலியல் ஒடுக்குமுறையும், வறுமையும் வெட்டவெளிச்சமாகியுள்ளன. சமயச் சார்பற்ற பகுத்தறிவின் குரலாக ஜாகிர்ராஜாவின் எல்லாப் படைப்புகளும் திகழ்வதைப் போலவே இந்த நாவலும் பகுத்தறிவின் வெளிச்சத்தில் வாழ்வின் புதிர்களைக் கொண்டாடுகிறது. விளிம்புநிலை இஸ்லாமியர்களின் வாழ்வியலைப் பரிசோதனை செய்து பார்க்கும் கீரனூர் ஜாகிர்ராஜாவின் படைப்பிற்குச் சமூகத்தில் ஓரந்தள்ளப்பட்டோர், பொருளாதாரத்தில் தாழ்வுற்றோர், சாதியில் புறந்தள்ளப்பட்டோர், பாலியலில் ஒடுக்கப்பட்ட பெண்கள் என இவர்கள் அனைவரும் ஆதாரச் சக்தியாக விளங்குகின்றனர்.

**பயன்பட்ட நூல்கள்**


1. கீரனூர் ஜாகிர்ராஜா, மீன்காரத் தெரு, 2006, மருதா, சென்னை
2. ஹெச்.ஜி.ரசூல், கெண்டைமீன் குஞ்சும் குர்ஆன் தேவதையும், 2009, ஆழி, சென்னை.
3. கே.என்.பணிக்கர், நவீன இந்திய சமூகத்தில் சிறுபான்மையினர், 2007, பாரதி புத்தகாலயம்,சென்னை.
4. சாதியும் வர்க்கமும், 1997, அலைகள், சென்னை.